**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No. 147/2018 தேதி- 11.07.2025

(P.W.1) - சுசிலாபாய்

<u>குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கின் ஏ-பட்டிகை சொத்து சர்வே எண்.42/12B 3 1/4 செண்ட் சொத்து என்றால் சரிதான். பட்டிகை சொத்தில் நான் அமைத்துள்ள வீட்டிற்கு கதவு எண் உள்ளதா என்றால் கதவு எண்.12ஏ என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு பக்கமும் சொத்துள்ளதா என்றால் என் மகன் விஜயகுமாரின் சொத்தாகும். மேற்சொன்ன சொத்து விஜயகுமாருக்கு எவ்வாறு உரிமைப்பட்டது என்றால் அது விலைக்கு வாங்கிய சொத்தாகும். மேற்சொன்ன சொத்து நான் என் மகன் விஜயகுமாருக்கு செட்டில் மெண்ட் ஆவணம் மூலம் எழுதி கொடுத்த சொத்து என்றால் சரியல்ல. என் மகன் சொத்திற்கு தெற்கு இணையாக பிரதிவாதி ஜான்ரோஸ் சொத்துள்ளது என்றால் உள்ளது இடையில் வழிப்பாதை உள்ளது. விஜயகுமார் சொத்திற்கும் பிரதிவாதிகளின் சொத்திற்கு இடையே ஒரு மதில் சுவர் உள்ளது என்றால் சரிதான்.

2. அசல் வழக்கு எண். 38/2009 என்று ஒரு வழக்கு தாக்கல் செய்து அவ்வழக்கில் மின் வாரியத்தை 1 மற்றும் 2 பிரதிவாதிகளாகவும், இவ்வழக்கின் பிரதிவாதியை 3-ஆம் பிரதிவாதியாகவும் அந்த வழக்கில் நான் ஜெசிலேட் என்று வாதி பெயர் தாக்கல் செய்திருந்தேன் என்றால் எனக்கு ஜெசிலேட் மற்றும் சுசிலா பாய் என்று இரு பெயர்கள் உள்ளது. இவ்வழக்கை சுசிலாபாய் என்ற பெயரில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன அசல் வழக்கு எண்.38/2009 வழக்கிலும் ஜெசிலேட் என்ற பெயரில் பி-பட்டிகை சொத்தாக வழிப்பாதை அவகாசம் கேட்டு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் பிரதிவாதிகள் வழிப்பாதை இல்லை என்று எதிர் கோரிக்கை மனு தாக்கல் செய்திருந்ததார்கள் என்றாலும் நான் பிரதிவாதிகளின் சொத்தில் அத்துமீறி நுழைய கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான்.

3. மேற்சொன்ன வழக்கில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளை கட்சியாக சேர்த்து பி-பட்டிகை வழியாக மின் இணைப்பு அமைக்க பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றாலும் எதிர் கோரிக்கை மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன எதிர் கோரிக்கை மனு உத்தரவில் நீதிமன்றம் என்னையோ என்னை சார்ந்தவர்களோ பிரதிவாதிகளின் பி-பட்டிகை சொத்து மற்றும் இதர சொத்துகளின் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துகட்டளை வழங்கியது என்றால் அதுபற்றி தெரியாது. மின் வாரியமும் பி-பட்டிகை சொத்தின் வழியாக மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழிப்பாதையும் இவ்வழக்கில் பாதை அவகாசம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழிப்பாதை ஒரே வழிப்பாதை என்றால் சரிதான்.

4. மேற்சொன்ன நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 3-ஆம் பிரதிவாதி நான் வழிப்பாதையாக இடம் 3-ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகப்பட்டதால் சுற்றி காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளார்கள் என்றால் இல்லை. மேற்சொன்ன காம்பவுண்ட் சுவரை நான் இடித்துவிட்டேன் என்றால் இல்லை. மேற்சொன்ன காம்பவுண்ட் சுவரைவிஜயகுமார் மற்றும் குளோரி ஆகியோர்கள் இடித்தார்கள் என்றால் இல்லை. மேற்சொன்ன வழக்கின் 3-ஆம்பிரதிவாதி மாண்புமிகு உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் தன் காம்பவுண்ட் சுவரை அமைக்கவும் சொத்தை அனுபவிக்கவும் பாதுகாப்பு கோரி CRLOP.(MD).No.16804/2018 என்ற மனு தாக்கல் செய்திருந்தார் என்றாலும் மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் தக்கலை காவல் ஆய்வளர் ஆகியோர்களுக்கு 3-ஆம் பிரதிவாதிக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன உத்தரவின் அடிப்படையிலும் மீண்டும் அவ்வழக்கில் 3-ஆம் பிரதிவாதி காம்பவுண்ட் சுவர் அமைத்தார் என்றாலும் அதை நான் இடித்துவிட்டேன் என்றால் சரியல்ல.

5. மேற்சொன்ன காம்பவுண்ட் சுவர் இடிக்கப்பட்டதற்கான புகைப்படம் என்றால் இல்லை. என் மகனின் சொத்திற்கு பின்னால் என்னுடைய சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன அசல் வழக்கு எண்.38/2009 வழக்கில் எனக்கு பாதை அவகாசம் இல்லை என்று தீர்ப்பனதால் பக்கத்தில் உள்ள வேறு ஒரு சொத்தை ஏ-

பட்டிகை சொத்தாக காண்பித்து சுசிலாபாய் என்ற பெயரில் அதே வழிப்பாதை அவகாசம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்தோடு போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.